# மாங்காடு நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு ஓம் சக்தி நகர் புதிய அலுவலக நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள் நடவடிக்கை விவரம்.

குறள்- எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

விளக்கம்- செருக்கு இல்லாமல் அடக்கமாக வாழ்வது எல்லார்க்குமே நல்லதுதான்;
அவ் எல்லாருள்ளும் செல்வர்களுக்கு அது மேலும் ஒரு செல்வமாக விளங்கும்.

----***-----

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் அக்டோபர் 2025 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான அக்டோபர் 2025 மாதத்திற்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் பொது சுகாதாரப் பிரிவின் வாயிலாக சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரின் பல பகுதிகளில் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதை சரிசெய்திடவும், மழைநீர் கால்வாய்களை சுத்தம் செய்திடவும், தெருக்களின் ஓரங்களில் காணப்படும் மண் மேடுகளை சரிசெய்திடவும், செடிகொடிகள் மற்றும் புதர்களை அகற்றி சுத்தம் செய்திடவும் JCB இயந்திரம் கொண்டு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நமது நகராட்சிக்கு சொந்தமான JCB இயந்திரம் ஏதும் இல்லை. எனவே, நகரின் பல பகுதிகளில் அவ்வப்போது JCB இயந்திரம் கொண்டு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் வாடகை அடிப்படையில் JCB இயந்திரம் பணிக்கு எடுக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை ஒப்பந்த அடிப்படையில் அக்டோபர் முதல் டிசம்பர் வரை மூன்று மாதங்களுக்கு மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவின தொகை ரூ.9.50 இலட்சம் தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி பெற்று மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் வீடுகளில் வளர்க்கப்படும் செல்ல பிராணிகளுக்கு உரிமம் பெற தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ல் துணை விதி 292 கீழ் சட்ட பிரிவு 105 கீழ் வெளியிடபட்ட அறிக்கையின் வாயிலாக அரசால் குறிப்பிட்டவாறு வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகளுக்கு நகராட்சியில் கட்டாயம் உரிமம் பெற வேண்டும் மற்றும் வீட்டில் உள்ள செல்ல பிராணிகள் நிபந்தனைகளுக்குட்பட்டு வளர்க்கவேண்டும் அவ்வாறு நிபந்தனைகளை மீறி எந்தவொரு கால்நடையும் கைபற்றபெற்றால் அதனை பட்டிக்கு எடுத்து செல்லலாம். அவ்வாறு கைபற்றபெற்ற கால்நடைகளை 48 மணி நேரத்திற்குள் மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற (தலா ஒன்றுக்கு) ரூ.3000/- வரை (அபராதம் மற்றும் உணவு மற்றும் பராமரிப்பு கட்டணம்) செலுத்துவதன் மூலம் திரும்ப பெறலாம்.

உரிம கட்டணம் கீழ் கண்டவாறு.

| வ.எண் | கால்நடை விவரம் | உரிமம் தொகை (தலா ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | மாடு | 100/- |
| 2 | கன்று | 50/- |
| 3 | ஆடு | 50/- |
| 4 | குதிரை | 150/- |
| 5 | கழுதை | 150/- |
| 6 | நாய் | 100/- |
| 7 | பன்றி | 100/- |

நகர் மன்றத்தின் அனுமதி பெற்று மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.6

மாங்காடு நகராட்சியில் 27 வார்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் ஆகியன நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. மற்றும் பொதுமக்களிடம் இருந்தும் தொடர்ந்து புகார்கள் இவ்வலுவலகத்திற்கு வந்த வண்ணம் உள்ளது. எனவே தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை (ANIMAL BIRTH CONTROL) செய்து நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் மற்றும் வெறிநாய் கடி தடுப்பூசி ( ANTI RABIES VACCINE ) செலுத்திடும் பணி மேற்கொள்வதும் அவசியமாகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:20383/2022/ எச்1/நாள்:07/09/2023 மற்றும் கால்நடை வளர்ப்பு பால், மீன்வளம் மற்றும் மீனவர் (AH3) துறை (4D) எண்:1/நாள்:17/03/2023 ஆகியவற்றில் தெரிவித்துள்ளபடி மேற்கண்ட பணியை செய்திட ஒரு நாய் ஒன்றிற்க்கு ரூ.1650/- செலவினம் செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் தோராயமாக 560 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய் தடுப்பூசி செலுத்திடும் பணிகளை தகுதிபெற்ற நிறுவனம் அல்லது தகுதிபெற்ற அமைப்புகள் வாயிலாக மேற்கண்ட பணிகள் செய்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.9.50 இலட்சம் செலவுகள் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.7

மாங்காடு நகராட்சி 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதார பணிகளை வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் பணிகளுக்காக M/s. Triad InfraTech நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி டன் ஒன்றுக்கு ரூ.4478/-(சேவை வரி நீங்கலாக) என தேர்வு செய்யப்பட்டது. மேற்படி தேர்வு செய்யப்பட்ட M/s. Triad InfraTech நிறுவனத்தின் மூலம் 01.12.2024 முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தது. இந்நிறுவனத்தின் ஒப்பந்தம் காலம் 30.11.2025 உடன் ஓராண்டு முடிவடைந்த நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு துப்புரவு ஆய்வாளரின் குறிப்புரையின் படி (01.12.2025 முதல் 30.11.2026 வரை) இராண்டாம் ஆண்டு காலத்திற்கு 10% கூடுதல் தொகை சேர்த்து டன் ஒன்றுக்கு ரூ.4925/- என்ற அடிப்படையில் தினசரி சேகரமாகும் 17.42 டன்னிற்கு தொழிலாளர்கள் நல நிதி 1% உட்பட மொத்த செலவினம் ரூ.317.58 லட்சத்திற்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தற்போதைய காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.8**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.18464/2023/வஅ1, நாள். 07.10.2025ன் படி, கீழ்குறிப்பிட்டுள்ள தார் சாலை மற்றும் சிமெண்ட் கான்கீரிட் சாலைகளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை/ஒட்டுவேலைகளை மறுசீரமைப்பதற்கு பின்பற்ற வேண்டிய நிலையான இயக்க நடைமுறைகளை இணைப்பு 1 முதல் 4-ல் உள்ள வகைகள் மற்றும் நிலையான மாதிரி மதிப்பீடுகளுடன் இணைக்கப்பட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது.

மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நகராட்சி பகுதியில் இயற்கை இடர்பாடுகள், குடிநீர் விநியோக பணிகள், போக்குவரத்து மற்றும் பாதளசாக்கடை திட்ட பணிகளால் சாலைகளின் சில பகுதிகள் சேதமடைந்து, பொது மக்கள் மற்றும் வாகனம் ஓட்டுநர்களுக்கு பயனிக்க இடையூறாகவும், பாதிப்பு ஏற்படும் வகையில் உள்ளது. எனவே தார் சாலை / சிமெண்ட் கான்கிரீட் சாலைகளில் ஏற்படும் பள்ளங்களை / ஒட்டுப் பணிகளை சரிசெய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

2) மேற்படி செலவினத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

**பொருள் எண்.9**

இந்நகராட்சியில் நகராட்சி பொறியாளர் அவர்கள் அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வந்த ஈப்பு வாகனம் (Bolero Jeep) வாகன எண்.TN85S0708 மேற்படி வாகனத்தின் குளிரூட்டும் சாதனம் பழுதாகியுள்ளதால் வாகனத்தினை இயக்க இயலாததால் அதனை விரைந்து சரி செய்யுவும், பராமரிப்பிற்காகவும் அரசு அங்கீகரிக்கப்பட்ட பணிமனையான "Mardha Mishri Motor's LLP D.No.235,Mount Poonamallee high road, Iyyappanthangal, Chennai-56ல் உள்ள பணி மனையில் விடப்பட்டு தற்போது முழுமையாக பழுது பார்க்கப்பட்டு மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகையாக ரூ.10,075.87/- வரப்பெற்றுள்ளது. மேற்படி ஈப்பு வாகனத்தின் அவசியம் கருதி பட்டியல் தொகை ரூ.10075.87 ஐ பொது நிதியிலிருந்து வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு:-**

**1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.10,075.87ஐ அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கி மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.10**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்ட பணிக்கு கடந்த **31.10.2025** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்யும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் வரப்பெற்ற நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் விவரம் | விலைப்புள்ளிதொகை ரூ. (18% GSTஉட்பட) |
|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்தல் பணி | M/S.Neeren Engineering Consultants<br>No.44,OtteriSalai<br>Madipakkam,<br>Ch-600091. | **11,55,220/-** |
| | | M/S. Imayam Creators<br>No.5,FirstFloor,<br>shop No,2 Skm Complex<br>Thiruvarur Main road,Puthur<br>Nagapattinam-611001. | **13,65,496/-** |
| | | M/S.Dzynhub Enginners<br>No.61,KrishnnaNagar 4th street<br>Mappedu,East Tambaram<br>Ch-600126. | **9,90,000/-** |

**<u>அலுவலக குறிப்பு</u>**-

1. மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவன M/S. Dzynhub Engineers நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.11**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2025–26 குடிநீர் நிதியின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த 16.10.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்யும் பணி | 9.80 | திருவாளர்.கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி | மதிப்பீடு தொகையை விட 0.10% **குறைவு** |
| | | | திருவாளர்.எச்.கே.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 4.78% **அதிகம்** |
| 2 | மாங்காடு நகராட்சியில் வார்டு எண்.15 முதல் 27 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்யும் பணி | 9.80 | திருவாளர்.கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி | மதிப்பீடு தொகையை விட 0.17% **குறைவு** |
| | | | திருவாளர்.எச்.கே.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 3.67% **அதிகம்** |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மாங்காடு நகராட்சியில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் திரவக்குளோரின் மூலம் நீரினை குளோரினேஷன் செய்யும் பணி | 9.50 | திருவாளர்.ஸ்ரீராஜகணபதி இன்ஜினியரிங்க் ஓர்க்ஸ் | மதிப்பீடு தொகையை விட 1.17% **குறைவு** |
| | | | திருவாளர்.ஸ்ரீசபரி இன்ஜினியரிங் | மதிப்பீட்டின் படி |
| 4 | வார்டு எண்.8 பகுதியில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்ததல | 14.00 | திருவாளர்.கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி | மதிப்பீடு தொகையை விட 0.23% **குறைவு** |
| | | | திருவாளர்.எச்.கே.கன்ஸ்ட் ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.52% **அதிகம்** |
| 5 | புதிய அலுவலக கட்டடத்திற்கு நவீன குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 8.00 | திருவாளர்.கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி | மதிப்பீடு தொகையை விட 0.50% **குறைவு** |
| | | | திருவாளர்.எச்.கே.கன்ஸ்ட் ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.98% **அதிகம்** |

**அலுவலக குறிப்பு:-**

**1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**2)** மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணியின் அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.12

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சியில் 2024-2025 மற்று.ம் 2025-2026 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள திட்ட பணிகள் குறித்து 01.10.2025 அன்று தினத்தந்தி நாளிதழில் பிரசுரப்படுத்தியதற்குண்டான பட்டியல் தொகை ரூ.95287.50/- (Inclusive of GST) The Daily Thanthi நாளிதழ் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத் தொகை ரூ.95287.50/- ஐ The Daily Thanthi நாளிதழ் நிறுவனத்திற்கு பொது நிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.13

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சியில் 2024-2025 மற்று.ம் 2025-2026 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள திட்ட பணிகள் குறித்து மாலைமுரசு நாளிதழில் பிரசுரப்படுத்தியதற்குண்டான பட்டியல் தொகை ரூ.20,000/- (Inclusive of GST) Chennai Murasu Private Limited நாளிதழ் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத் தொகை ரூ.20,000/- ஐ Chennai Murasu Private Limited நாளிதழ் நிறுவனத்திற்கு பொது நிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.14

இந்நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 1 முதல் 5ம் வகுப்பு வரை அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் அரசாணை நிலை எண்.72 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை (சச-1) துறை நாள்.27.06.2025ன்படி விரிவுபடுத்தப்பட்டு 26.08.2025 முதல் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை 28 அவர்களின் கடித ந.க.எண். 17404/2022/எம்1, நாள்.10.10.2025ன்படி அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு பரிமாறும் பணிக்கு 100 மாணவர்களுக் ஒருவர் என்ற விகிதத்தில் பணியாளர் சுய உதவிக்குழு, இல்லம் தேடி கல்வி பணியாளர் அல்லது விருப்பம் உள்ள குழந்தைகளின் தாயார் ஆகியோர்களில் ஒருவர் அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியரின் அனுமதியோடு நியமிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1500/- மதிப்பூதியம் கல்வி நிதி / பொதுநிதியிலிருந்து வழங்கப்பட வேண்டு என அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தற்போது இந்நகராட்சிக்குட்ட அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ஒரு நபருக்கு ரூ.1500/- மதிப்பூதியம் கல்வி நிதி / பொது நிதியிலிருந்து வழங்கவும் மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** மன்றம் அனுமதி வழங்கலாம், மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு சிறப்பு திட்டம் என்பதால் மேற்படி உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் தலா ஒரு நபருக்கு ரூ.1500/- மதிப்பூதியம் கல்வி நிதி / பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.15

மாங்காடு நகராட்சி 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதார பிரிவு வாயிலாக டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி DBC பணியாளர்களை கொண்டு டெங்கு கொசு உற்பத்தி கலன்களை அழித்தல் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் புகை மருந்து தெளிக்கும் பணி போன்ற பணிகளை மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களின் கடித நாள் 2571/2017/01 நாள் 23.04.2018 ன் வழி காட்டுதலின் படி இதற்கு பிளான் 300 திட்டத்தின் படி 6 Day Block முறையில் பணி மேற்கொள்ள 52 பணியாளர்களை நியமிக்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விவரம் | மதீப்பீடு தொகை ரூ,லட்சத்தில் | ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் வெளிகொணர்வு முறையில் 52 DBC பணியாளர்களை நியமிக்க | ரூ.32.00 | புளூமிங் ரீசைக்கிள்ஸ் | மதிப்பீடு தொகைக்கே |
| | | | டிரைட் இன்ப்ரா டெக் | மதிப்பீடு தொகையைவிட 2.65% அதிகம் |

அலுவலக குறிப்பு:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி விகிதம் வழங்கிய ஒப்பந்த்தாரருக்கு பணியின் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.16

மாங்காடு நகராட்சியில் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை அகற்றும் பணி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து கையாளப்படுகிறது. இதில் 8 டன் அளவிற்கு மறு சுழற்சி செய்ய இயலாத திடக்கழிவுகள் MCC-1 மற்றும் MCC-2 ல் சேர்த்து வைக்கப்படுகிறது. இதன்படி தினசரியில் 8 டன் அளவிற்கு கடந்த அக்டோபர் 2025 முதல் டிசம்பர் 2025 வரை சுமார் 720 டன் குப்பைகள் MCC-1 மற்றும் MCC-2 ல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இதனை அகற்றி அனகாபுத்தூர் மெயின்ரோடு பகுதியில் உள்ள ஸ்ரீ பாலாஜி கிரீன் எனர்ஜி என்ற நிறுவனத்திற்கு கொண்டு செல்ல ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விவரம் | மதீப்பீடு தொகை ரூ,லட்சத்தில் | ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | MCC-1 மற்றும் MCC-2 ல் சேகரித்துவைக்கப்பட்டுள்ள மக்காத குப்பைகளை ஸ்ரீ பாலாஜி கீரீன் எனர்ஜி என்ற நிறுவனத்திற்கு கொண்டு செல்ல டன் ஒன்றுக்கு வாகன வாடகை. | ரூ.9.50 | MSR எர்த் மூவர்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.38% குறைவாக |
| | | | K.அருண்குமார் | மதிப்பீடு தொகையைவிட 6.92% அதிகம் |

அலுவலக குறிப்பு:- 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி விகிதம் வழங்கிய ஒப்பந்த்தாரருக்கு பணியின் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

பொருள் எண்.17

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பணியாளர்களுக்கு மற்றும் பொது பிரிவு பணியாளர்களுக்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது எனவே அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்திடவுடம் அதற்கான செலவீன தொகை ரூ.1,00,000/- ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்

பொருள் எண்.18

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள பகுதிகளில் பொது சுகாதார பிரிவின் வாயிலாக திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணியினை தனியார் மயம் வாயிலாக வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினந்தோறும் உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வாங்கப்படுகிறது . அவ்வாறு தரம் பிரித்து வாங்கப்படும் குப்பைகளை நகரில் உள்ள நுண்ணுர செயலாக்க மையம் (MCC) கொண்டு சென்று உரம் தயாரித்தல் பணிகள் மற்றும் வளம்மீட்பு மையம்(RRC) கொண்டு சென்று மறுசுழற்சி செய்ய இயலாத பொருட்களை சிமெண்ட்

தொழிற்சாலைகளுக்கு அனுப்புதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. நமது நகராட்சியில் இரண்டு MCC மையங்கள் மற்றும் ஒரு RRC மையங்களில் பணிபுரிய ஒரு மையத்திற்கு 4 தூய்மை பணியாளர் வீதம் தேவைப்படுகின்றனர். எனவே 3 மையங்களுக்கும் 12 தூய்மை பணியாளர் தேவைப்படுகின்றனர். தற்போது நமது நகராட்சியில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் குறைவான அளவில் உள்ளனர். எனவே மேற்கண்ட இரண்டு MCC மற்றும் ஒரு RRC மையங்களில் உரம் தயாரித்தல் பணிகள் சரிவர மேற்கொள்ள இயலவில்லை. ஆனால் தற்போது மேற்காணும் பணிகள் மேற்கொள்வது அவசியமாக ஒன்றாகும். எனவே MCC மற்றும் RRC மையங்களில் பணிகள் மேற்கொள்ள 12 தூய்மை பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விலை விகிதத்தில் ஆறுமாத காலத்திற்கு ள ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் நகர மன்றத்தின் அனுமதி பெற்று பணி அமர்திக்கொள்ள அதற்கான தோராய செலவினம் ரூ.15.00/- இலட்சம் மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்

பொருள் எண்.19

மாங்காடு நகராட்சியில் கசடு கழிவு மேலாண்மை திருத்த விதிகள் குறித்து மாலைமுரசு நாளிதழில் பிரசுரப்படுத்தியதற் குண்டான பட்டியல் தொகை ரூ.10,000/- (Inclusive of GST) Chennai Murasu Private Limited நாளிதழ் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத் தொகை ரூ.10,000/- ஐ Chennai Murasu Private Limited நாளிதழ் நிறுவனத்திற்கு பொது நிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.20

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திட்டம் 2025–26 பொது நிதியின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த 23.10.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் தேங்கும் மழைநீரினை வாடகை அடிப்படையில் வெளியேற்ற ஜேசிபி வாகனம் சப்ளை செய்தல் | **9.70** | திருவாளர்.எம்.எஸ்.ஆர். எர்த்மூவர்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.13% **குறைவு** |
| | | | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 1.40% **அதிகம்** |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் தேங்கும் மழைநீரினை வாடகை அடிப்படையில் வெளியேற்ற ஜேசிபி வாகனம் சப்ளை செய்தல் | 9.70 | திருவாளர்.எம்.எஸ்.ஆர். எர்த்மூவர்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.13% **குறைவு** |
| | | | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 1.40% **அதிகம்** |
| 3 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 09 வரை உள்ள பகுதிகளில் தேங்கும் மழைநீரினை வாடகை அடிப்படையில் டிராக்டர் மூலம் மழைநீரினை அப்புறப்படுத்துதல் பணி | 10.00 | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.09% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.18% **அதிகம்** |
| 4 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் தேங்கும் மழைநீரினை வாடகை அடிப்படையில் டிராக்டர் மூலம் மழைநீரினை அப்புறப்படுத்துதல் பணி | 10.00 | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.09% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.18% **அதிகம்** |
| 5 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் தேங்கும் மழைநீரினை வாடகை அடிப்படையில் டிராக்டர் மூலம் மழைநீரினை அப்புறப்படுத்துதல் பணி | 10.00 | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.09% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.18% **அதிகம்** |
| 6 | வெள்ள தடுப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான மணல் மூட்டைகள் சவுக்கு கொம்பு, ரோப், மரம் அறுக்கும் இயந்திரம், ரெயின் கோர்ட் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பணியாட்கள் சப்ளை செய்தல் | 9.00 | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.18% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.71% **அதிகம்** |
| 7 | வெள்ளதடுப்பு பணிகள் மேற்கொள்ள தேவையான மழைநீர் குழாய்கள், மின்கேபிள்கள் ஸ்டாட்டர் போன்ற உதிரிபாகங்கள் சப்ளை செய்தல் | 9.00 | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.15% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.84% **அதிகம்** |
| 8 | நகராட்சிக்கு சொந்தமான டீசல் மோட்டார்கள் பழுது பார்த்தல் | 5.00 | திருவாளர் கென்ஸ்டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 0.14% **குறைவு** |
| | | | திருவாளர் எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 1.87% **அதிகம்** |
| 9 | தாழ்வான பகுதிகளில் இருந்து வெளியேறும் பொதுமக்களை தங்க வைக்கும் நிவாரண மையங்கள் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி வளாகங்கள் மற்ம் நகராட்சி அதிதிறன் கொண்ட மின் மோட்டார்களை இயக்க தேவையான டீசல் ஜெனரேட்டர்கள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்தல் | 7.00 | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.14% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.18% **அதிகம்** |
| 10 | மாங்காடு நகராட்சி பகுதியில் அடிசன் நகர் மற்றும் ஜீவா நகர் பகுதியில் தேங்கும் மழைநீர் வெளியேற்ற 2 எண்ணிக்கை யிலான 25HP திறன் கொண்ட டீசல் என்ஜின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | 15.00 | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.07% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.89% **அதிகம்** |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | மாங்காடு நகராட்சி பகுதயில் ஓம்சக்தி நகர் மற்றும் கோவிந்தராஜ் நகர் பகுதியில் தேங்கும் மழைநீர் வெளியேற்ற 2 எண்ணிக் கையிலான 25HP திறன் கொண்ட டீசல் என்ஜின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | 15.00 | திருவாளர். ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.07% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.89% **அதிகம்** |
| 12 | மாங்காடு நகராட்சி பகுதியில் சக்ரா நகர் மற்றும் ரகுநாதபுரம் பகுதிகளில் தேங்கும் மழைநீர் வெளியேற்ற 2 எண்ணிக்கை யிலான 25HP திறன் கொண்ட டீசல் என்ஜின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | 15.00 | திருவாளர். ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.07% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.89% **அதிகம்** |
| 13 | மாங்காடு நகராட்சி பகுதிகளில் தேங்கும் மழைநிர் வெளியேற் 5 எண்ணிக்கையிலான 15 HP திறன் கொண்ட டீசல் என்ஜின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | 12.50 | திருவாளர். ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.10% **குறைவு** |
| | | | திருவாளர்.ஜீவா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.62% **அதிகம்** |

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு திட்ட பணியின் அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.21

மாங்காடு நகராட்சியில் 2025-2026ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பின்வரும் பகுதிகளில் தெருமின் கம்பங்கள் அமைக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் |
|---|---|---|
| 1 | 2 | வார்டு எண்.2ல் உள்ள சுடுகாடு பகுதியில் 16 எண்ணிக்கை புதிய மின் கம்பங்கள் அமைத்தல் |
| 2 | 17 | 20 எண்ணிக்கை புதிய தெரு மின் கம்பங்கள் அமைத்தல் |

அலுவலக குறிப்பு- 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.22

மாங்காடு நகராட்சியில் பொது நிதியின் கீழ் பின்வரும் பகுதியில் தெருமின் கம்பங்கள் அமைக்க மின்வாரியத்திடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,39,200/-ஐ பொது நிதியின் கீழ் செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் |
|---|---|---|
| 1 | 6 | வார்டு எண்.6ல் உள்ள நரிவனம் சாலையில் புதிய மின் கம்பங்கள் (HT Line) அமைத்தல் |

அலுவலக குறிப்பு- 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி மதிப்பீட்டு தொகையினபொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.23**

மாங்காடு நகராட்சியில் பின்வரும் அடிப்படை வசதி பணிகளை செய்துத் தரக்கோரி வார்டு சபா கூட்டத்தின் மூலம் மனுக்கள் பெறப்பட்டதை தொடர்ந்து, பணியின் அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 6 | பத்மாவதி நகர் மற்றும் வசந்தபுரம் பகுதியில் பெயர் பலகை அமைத்தல் | 2.00 |
| 2 | 5 | திருமாநகர் 1வது குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 5.50 |
| 3 | 3 | வடக்கு ரகுநாதபுரம் 1வது குறுக்கு தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 16.00 |

அலுவலக குறிப்பு- 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.24**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவின் கீழ் நடைபெறும் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதிப்பணிகளை கண்காணிக்கவும், மதிப்பீடுகள் மற்றும் பட்டியல் தயார் செய்யவும் தேவையான தினசரி பணிகளில் சிரமம் ஏற்படுகிறது. இதுபோல் பொறியியல் பிரிவின் கீழ் பராமரிக்கப்படும் ஈப்பு வாகனத்திற்கான ஓட்டுநர் மற்றும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி இயக்குதல் பணிகளுக்கும் போதிய ஆட்கள் இல்லாததால் தற்போது ஒப்பந்த அடிப்படையில் ஆறுமாத காலத்திற்கு தொழில்நுட்ப உதவியாளர்கள் மூன்று நபர்கள், இலகுரக ஓட்டுநர்கள் 3 நபர்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை இயக்க தேவையான மஸ்தூர் கிரேடு-I 4 நபர்கள் மற்றும் கணினி இயக்குபவர்-1 நபர் பணியமர்த்தி கொள்ள மதிப்பீடு தொகை ரூ.24.00லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் பார்வையிட்டு பதியலாம்
2) மேற்படி பணியின் அவசியம் கருதி ஆறு மாத காலத்திற்கு ஜனவரி 2026 முதல் ஜூன் 2026 வரை பணியளமர்த்திக்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.24.00 லட்சம் பொதுநிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.25**

மாங்காடு நகராட்சியில் பின்வரும் அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 10 | சக்ரா நகர் பள்ளியில் மேல் தளம் புதுப்பித்தல் | 5.00 |
| 2 | 11 | நகராட்சி கட்டிட மேல்தளத்தில் பதிவேடு இருப்பு அறை கட்டுதல் | 14.50 |
| 3 | 5 | ஏ.ஆர்.நகர் 5 வது தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 16.20 |
| 4 | 23 | கே.கே. நகர் 8 வது தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 3.50 |
| 5 | 23 | கே.கே.நகர் 1வது தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 3.90 |
| 6 | 23 | மேல் தெரு 4வது தெருவில் பேவர் பிளாக் சாலை புதுப்பித்தல் | 8.65 |
| 7 | 18 | திருவேங்கடம் நகர் பகுதியில் புதிய குடிநீர் குழாய் புதுப்பித்தல் | 3.50 |

| | | | |
|---|---|---|---|
| 8 | - | நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகளில் தானியங்கி திரவ குளோரினேசன் மோட்டார் பழுது பார்த்தல் மற்றும் கூடாரங்கள் அமைத்தல் | 9.40 |
| 9 | 4 | மீனாட்சி நகர் மெயின்ரோடு மழைநீர் கால்வாய் அமைத்தல் | 9.50 |
| 10 | - | வார்டு எண்.1 முதல் 12 வரை உள்ள பழுதடைந்த சாலைகளை (wmm)சீரமைத்தல் | 5.00 |
| 11 | - | வார்டு எண்.13 முதல் 27 வரை உள்ள பழுதடைந்த சாலைகளை ((wmm)சீரமைத்தல் | 5.00 |
| 12 | 18 | ஹரி அவென்யூ பூங்கா பகுதியில் மண் நிரப்பி உயர்த்துதல் | 5.00 |
| 13 | 11 | மழைக்காலங்களில் மழைநீரை வெளியேற்ற ஓம்சக்தி நகர் 1 வது மெயின் ரோட்டில் கீழ்நிலைத்தொட்டி (Sump)அமைத்தல் | 3.20 |
| 14 | 11 | மழைக்காலங்களில் மழைநீரை வெளியேற்ற ஓம்சக்தி நகர் 2 வது மெயின் ரோட்டில் கீழ்நிலைத்தொட்டி (Sump)அமைத்தல் | 3.20 |
| 15 | 6 | மழைக்காலங்களில் மழைநீரை வெளியேற்ற அடிசன் நகர் மெயின் தெருவில் கீழ்நிலைத்தொட்டி (Sump)அமைத்தல் | 3.20 |
| 16 | 11 | அலுவலக வளாகத்தின் நுழைவாயிலில் கால்நடை பொறி (Cattle Trap) அமைத்தல் | 3.50 |
| 17 | - | தொழில்நுட்ப உதவியாளர் (நிலை -1) மற்றும் (நிலை-2) ஓட்டுநர் மற்றும் மஸ்தூர் கிரேடு -1 மற்றும் தட்டச்சர் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாத காலத்தற்கு பணியமர்த்துதல் | 19.90 |
| 18 | - | நவீன எரிவாயு தகன மையம் மற்றும் நகராட்சி அலுவலகம் செல்லும் சாலைகளில் பெயர் பலகை அமைத்தல் | 2.50 |
| 19 | 17 | நகராட்சி MCC-1 & MCC 2ல் பராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 14.00 |
| 20 | 3 | வார்டு எண்.3 சக்தி நகர் பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 12.30 |
| 21 | 5 | ஜீவா நகர் பகுதியில் பம்ப் ரூம் அமைத்தல் | 11.50 |
| 22 | - | நகராட்சி பகுதியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் வர்ணம் பூசுதல் பணி | 4.50 |
| 23 | 5 | ஏ.ஆர். நகர் பூங்காவில் பராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 2.00 |
| 24 | - | நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு கணினிகள் (Computer) கொள்முதல் செய்தல் | 13.90 |
| 25 | 11 | நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பிரிண்டர்கள் கொள்முதல் செய்தல் | 6.20 |
| 26 | 9 | சாந்தி நகர் 2வது குறுக்கு தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 3.25 |
| 27 | - | சுந்தரேசன் தெரு 1வது தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 12.50 |
| 28 | 5 | சி.டி.ஏ.கார்டன் பகுதியில் இருப்பு அறை கட்டுதல் பணி | 11.80 |
| 29 | 17 | நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் தடுப்பு சுவர் மற்றும் பராமத்து பணி மேற்கொள்ளுதல் | 17.00 |
| 30 | 17 | நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 11.10 |
| 31 | 5 | ஏ.ஆர்.நகர் பூங்காவில் மண் நிரப்பி உயர்த்துதல் | 5.00 |
| 32 | 26 | இந்திரா நகர் மெயின் ரோடு தார்தளம் அமைத்தல் | 16.50 |
| 33 | - | வார்டு எண்.1 முதல் 27 வரையில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை பராமரிப்பு பணி செய்தல் | 10.00 |
| 34 | 6 | பத்மாவதி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.30 |
| 35 | 17 | செல்வகணபதி நகர் பூங்காவில் மண் நிரப்பி உயர்த்துதல் | 6.50 |
| 36 | 9 | அடிசன் நகர் பூங்காவில் உடற்பயிற்சி சாதனங்கள் அமைத்தல் | 10.00 |
| 37 | 9 | அடிசன் நகர் பூங்காவில் கூடுதல் பணிக்காக இருக்கைகள் நிழற்கூடாரம், நீரூற்று அமைத்தல் | 15.60 |
| 38 | 15 | வார்டு எண்.15ல் காரிய மேடை அமைத்தல் | 9.60 |
| 39 | 15 | கீழ்ரகுநாதபுரம் ஸ்ரீ காமாட்சி நகர் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.00 |

| | | | |
|---|---|---|---|
| 40 | 15 | இரகுநாதபுரம் பகுதியில் சுற்றுசுவர் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 15.20 |
| 41 | 20 | புதிய நூலக கட்டிடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல் | 20.00 |
| 42 | 18 | திருவேங்கடம் நகர் மற்றும் திருவள்ளுவர் சிட்டி பேஸ் 1 ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி செய்தல் | 5.00 |
| 43 | 11 | புதிய அலுவலக வளாகத்தில் மேல்தளத்தில் நவீன குடிநீர் வழங்கி பொறுத்துதல் பணி | 1.75 |
| 44 | 5 | பத்திரிமேடு 1வது, 2வது குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 4.50 |
| 45 | 5 | நவபாரத் பள்ளி சாலையில் பேவர் பிளாக் சாலையை மாற்றிமைத்தல் | 17.60 |
| 46 | 5 | சாந்தி நகர் குறுக்கு தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 4.70 |
| 47 | 5 | பத்திரிமேடு 1வது மெயின் ரோடு பூங்காவின் காலி இடத்தில் சுற்றுசுவர் அமைத்தல் | 11.50 |
| 48 | 7 | மாருதி என்கிளேவ் பூங்காவில் மண் நிரப்பி உயர்த்துதல் | 6.00 |
| 49 | 7 | ஸ்ரீனிவாசா பார்ம் தெருவில் மின் விளக்குகள் அமைத்தல் | 19.90 |
| 50 | 2 | இரகுநாதபுரம் மயானத்தில் மோட்டார் அறை மற்றும் நிழற்கூடாரம் அமைத்தல் | 6.20 |
| 51 | 21 | மங்களபுரம் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 12.50 |
| 52 | 5 | பத்ரிமேடு மயான பகுதியில் எரிமேடை அமைத்தல் | 4.50 |
| 53 | 24 | அண்ணா தெரு மெயின் ரோடு பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 19.30 |
| 54 | 24 | தென்காலனி அண்ணா தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 8.60 |
| 55 | 4 | அசோக் அவென்யூ பூங்காவில் மண் நிரப்பி உயர்த்துதல் | 6.20 |
| 56 | 17 | செல்வகணபதி நகர் பூங்கா நடைபாதை விளையாட்டு உபகரணங்கள் இருக்கைகள் மின் விளக்குகள் செடி கொடிகள் நீரூற்று அமைத்தல் | 15.00 |

அலுவலக குறிப்பு-

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.26**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஜேசிபி இயந்திரம் கொண்டு 2023–2024ம் ஆண்டிற்கு எம்.எஸ்.ஆர்.எர்த்.மூவர்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. 31.03.2024ல் ஒப்பந்த காலம் முடிவடைவதால் 2025–2026 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர பணி உத்திரவு வழங்கப்படும் வரை எம்.எஸ்.ஆர் எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவின தொகை ரூ.15.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.27**

நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5094/2022/டிபி3, நாள்.19.04.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பூங்கா, விளையாட்டு மைதானம், திறந்தவெளியிடம் குறித்த விவரங்களை தமிழக அரசிதழில் வெளியிட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதி அளிக்கலாம்.

பொருள் எண். 28

காஞ்சிபுரம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.613/2025/இ2,2, நாள்.29-10-2025 கடிதத்தில் நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் SIR நடத்த இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளதாகவும் SIR பணிகளை செவ்வனே செய்திட அந்தந்த சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படவும் தேவையான பணியாளர்கள் மற்றும் பிற உதவிகளை செய்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் , மாங்காடு நகராட்சி பகுதிக்குட்பட்ட வாக்காளர் பட்டியல் 33 பாகங்கள் SIR பணிகளுக்கு பெறப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை 2002 மற்றும் 2005 சிறப்பு தீவிர திருத்தப்பட்டியலில் வாக்காளரின் பெயர் இடம் பெற்றுள்ளதை Mapping செய்யவும் Mobile App ல் பதிவு செய்யவும் தற்காலிக பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ளவும் மேலும் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்படுவதை ஆட்டோ மூலம் ஒலி பெருக்கி வைத்து விளம்பரம் செய்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்தவும் இதர உதவிகளை செய்திடவும் அறிவுரை வழங்கியுள்ளார்.

எனவே மேற்கண்ட விரிவான விவரப்படி வெளிக்கொணர்வு பணியாளர்கள் பயன்படுத்தவும் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும் அத்றகான உத்தேச செலவு ரூ.5,00,000/-க்கும் பணிகளை உடன் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தரவிலை அட்டவணைக்குட்பட்டு வெளிக்கொணர்வு பணியாளர்கள் பயன்படுத்தவும் ஆட்டோ விளம்பரம் செய்யவும் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பி.சற்குணன் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.29

இந்நகராட்சியில் 6வது வார்டுக்குட்பட்ட இராமகிருஷ்ணா அவென்யூ 4வது தெருவில் பொதுநிதியின் கீழ் ரூ.19.80 லட்சம் மதிப்பீட்டில் மழைநீர் கால்வாய் அமைக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.815, நாள்.28.02.2025-ன் படி நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு 15.04.2025ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர் தில்லை நடராஜா ரோடு கன்ஸ்டிரக்ஷன்ஸ் பி.லிட்., நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் கீழ் ராமகிருஷ்ணா அவென்யூ 4வது தெருவில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட மழைநீர் கால்வாயிலிருந்து வெளியேற வேண்டிய மழைநிர் மணலி ராமகிருஷ்ணா நகர் பிரதான சாலையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கால்வாயின் வழியே மழைநீர் வெளியேற உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி இடத்தில் புவியியல் பரப்பின்படி மணலி ராமகிருஷ்ணா நகர் பகுதியில் மிகவும் மேட்ன பகுதியாக உள்ளதால் மழைநீர் கால்வாய் அமைக்க இயலாத காரணத்தினால் இத்தெருவில் மழைநீர் தேங்குவதால் போக்குவரத்திற்கு இடையூராகவும் பொது சுகாதார சீர் கேடு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே ராமகிருஷ்ணா அவென்யூ 4வது தெருவில் நிரத்ர தீர்வின் கீழ் மழைநீர் கால்வாய் அமைக்க இத்தெருவின் கிழக்கு புறம் உள்ள ஏ.ஆர்.நகர் முதல் குபேர்ன் தெரு வரை உள்ள பகுதியில் மழைநீர் கால்வாய் பணியினை அமைத்து தருமாறு நகர்மன்ற தலைவர் அவர்கள் கோரியுள்ளார்.

எனவே மேற்படி ராமகிருஷ்ணா அவென்யூ 4வது தெருவில் மழைநீர் கால்வாய் அமைக்கவும் நிரந்தர தீர்விற்காகவும், ஏ.ஆர் நகர் முதல் குபேரன் தெரு வரை உள்ள பகுதியில் தற்போது பணி உத்திரவு வழங்கியுள்ள இதே ஒப்பந்ததாரர் மூலம் மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணியினை இடம் மாற்றி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் எதிர்வர உள்ள வடகிழக்கு பருவ மழைக்கு முன்னர் பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- பணியின் அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

<u>பொருள் எண்.30</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் பொது சுகாதாரப் பிரிவின் வாயிலாக தெருக்களின் ஓரங்களில் காணப்படும் மண் மேடுகளை சரிசெய்திட JCB இயந்திரம் கொண்டு 2023 - 2024 ஆண்டிற்கு MSR எர்த்மூவர்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் செய்யப்பட்டு வருகிறுது 31.03.2024 ஒப்பந்த காலம் முடிவடைந்தால் 2025 -2026 ஆம் ஆடண்டிற்கு ஒப்பந்த புள்ளி கோர பணி உத்திரவு வழங்கப்படும் வரை MSR எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு அக்டோபர் 2025 முதல் டிசம்பர் 2025 வரை கால நீட்டிப்பு செய்திட நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகரமன்ற தலைவர்
மாங்காடு நகராட்சி

பொருள் எண்.25

மாங்காடு நகராட்சியில் பின்வரும் பணிகளை மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 01 | 3 | வார்டு எண்.3 சக்தி நகர் பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 12.30 |
| 02 | 5 | ஏ.ஆர். நகர் பூங்காவில் பராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 2.00 |
| 03 | 5 | ஏ.ஆர்.நகர் பூங்காவில் மண் நிரப்பி உயர்த்துதல் | 5.00 |
| 04 | 6 | | |
| 06 | 7 | மாருதி என்கிளேவ் பூங்காவில் மண் நிரப்பி உயர்த்துதல் | 6.00 |
| 04 | 9 | அடிசன் நகர் பூங்காவில் உடற்பயிற்சி சாதனங்கள் அமைத்தல் | 10.00 |
| 05 | 9 | அடிசன் நகர் பூங்காவில் கூடுதல் பணிக்காக இருக்கைகள் நிழற்கூடாரம், நீறூற்று அமைத்தல் | 15.60 |
| 07 | 17 | செல்வகணபதி நகர் பூங்கா நடைபாதை விளையாட்டு உபகரணங்கள் இருக்கைகள் மின் விளக்குகள் செடி கொடிகள் நீரூற்று அமைத்தல் | 15.00 |

அலுவலக குறிப்பு- 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளை நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகரமன்ற தலைவர்
மாங்காடு நகராட்சி